## பத்திரிக்கை குறிப்பு

புகார்தாரர் 87 வயதுடைய விவசாயி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தர்மபுரி அலுவலகத்தை அணுகி, தர்மபுரி மாவட்டம், ஹரூர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் தான் பெற்ற கடன் தொகையை திரும்ப அடைத்துவிட்டது தொடர்பாக பாக்கி இல்லா சான்றிதழ் வழங்க விண்ணப்பித்ததாகவும் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்ய திரு. முருகன், செயலாளர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தர்மபுரி அவர்கள், தனக்கு ரூ.3,500/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, இன்று 04.01.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.முருகன், செயலாளர் அவர்கள், புகார்தாரரிடமிருந்து ரூ.3,500/- கையூட்டாக கேட்டு பெற்றபோது, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்டவர் லஞ்சமாக கேட்டு பெற்ற பணத்தை கழிவறையில் போட்டு தண்ணீர் திறந்து விட்டார். மேற்படி பணம் கழிவறையின் நீர்வெளியேற்றும் குழாயிலிருந்து கைப்பற்றப்பட்டது.

# PRESS NOTE

The complainant a farmer aged 87 years, approached Vigilance & Anti – Corruption, Dharmapuri detachment, and gave complaint that he had applied for No due certificate for the loan he had repaid, at Harur Primary Agricultural Cooperative and Rural Development bank Dharmapuri, for which Tr.Murugan, Secretary, Harur Primary Agricultural Cooperative and Rural Development bank Dharmapuri demanded Rs.3,500/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized today 04.01.2022.

During trap proceedings, Tr.Murugan, Secretary, Harur Primary Agricultural Cooperative and Rural Development bank Dharmapuri received the bribe money of Rs.3,500/- from the complainant. Accused put the tainted amount inside the toilet and flushed it with water. But the tainted amount was recovered from the outlet pipe of the toilet. The accused was arrested.